வழக்கைப் பாதிக்கக்கூடும் என்ற கருத்தில் வெளியிடப்படவில்லை. அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக தீ விபத்துக்கள் நேரிட்டன என்ற கருத்தை நான் சொன்னதற்கு ஆதாரம் ஏதேனும் உண்டா என்று அவர்கள் கேட்டார்கள். அந்த அறிக்கை வெளியிடப் படுகின்ற நேரத்தில் அதற்கு ஆதாரம் இருக்கிறதா இல்லையா என்பதை உறுப்பினர்கள் அறிந்து கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வி, துணைக் கமிஷனர் நியமனம் பற்றியது. அதைப்பற்றி மட்டும் துணைக் கேள்விகள் கேட்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM: The Chief Minister was pleased to state that there was an appeal pending before the High Court regarding a fire accident. Is it not a fact that the Lower Court has acquitted the accused people and said that they are not guilty? Is it not a fact that the Government went on appeal to the High Court just to harass Congressmen?

THE HON. THIRU C. N. ANNADURAI: My hon. Friend is thoroughly misinformed. There was a series of cases. In one or two cases the accused were acquitted. There is a case where a sentence was given and the party has preferred an appeal.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(அ) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) மசோதா.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) மசோதாவை அவை முன் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

3. அரசினர் மசோதாக்கள்.

(அ) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) மசோதாவை இம் மாமன்றத்தின் திருமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இம் மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.